அத்ரி உவாச –

பர: பராணாம் புருஷோ யஸ்ய துஷ்டோ ஜனார்தன:|
ஸ ப்ராப்நோதி அக்ஷயம் ஸ்தானம் ஏதத் ஸத்யம் மயோதிதம்|| (1–11–44)

"ஹே ராஜகுமாரனே! லோகேச்வரனான பகவான் ஜனார்த்தனன் எவனைக் கடாக்ஷிக்கின்றானோ அவனே, அழிவற்றதான திவ்ய ஸ்தானத்தை உடையவனாவான். இந்த என் வாக்கை சத்திய வாக்கென்று நினைப்பாயாக" என்று அத்ரி முநிவர் கூறினார்.

ஆங்கிரஸ உவாச –

யஸ்ய அந்த: ஸர்வம் ஏவேதம் அச்யுதஸ்ய அவ்யய ஆத்மன:|
தம் ஆராதய கோவிந்தம் ஸ்தானமக்ர்யம் யதீச்சஸி|| (1–11–45)

"எல்லாவற்றைக் காட்டிலும் மேலான பதவியை நீ அடைய விரும்பினால், சராசர ஆத்மகமான அனைத்து ப்ரபஞ்சங்களும் எவனுடைய விரல் நுனியில் இருக்கின்றதோ, அந்த பகவான் ஸ்ரீ கோவிந்தனுடைய திருவடித் தாமரைகளை அர்ச்சிப்பாயாக" என்று ஆங்கிரஸ முநிவர் கூறினார்.

புலஸ்த்ய உவாச –

பரம் ப்ரஹ்ம பரம் தாம யோ(அ)ஸௌ ப்ரஹ்ம ததா பரம்|
தமாராத்ய ஹரிம் யாதி முக்திமப்யதி துர்லபாம்|| (1–11–46)

"எவன் பரப்ரம்மாகவும், பரமப்ராப்யமாகவும், ஸர்வ வ்யாபகனுமாக இருக்கின்றானோ அந்த பகவான் ஸ்ரீ ஹரியை ஆராதனம் செய்வதினால் பெறுவதற்கு மிக அரிதான மோக்ஷத்தையே அடைய முடியுமெனில், இதர ஸ்தாநங்களை அடைவதில் ஸந்தேஹம் கிஞ்சித்துமில்லை" புலஸ்த்ய மாமுநிவர் கூறினார்.

புலஹ உவாச –

ஐந்த்ரமிந்த்ர: பரம் ஸ்தாநம் யமாராத்ய ஜகத் பதிம்|
ப்ராப யஜ்ஞபதிம் விஷ்ணும் தமாராதய ஸுவ்ரத|| (1–11–47)

"முன்னொரு காலத்தில் இந்திரன் ஜகத் பதியான எவனை ஆராதித்து மிக உயர்ந்ததான இந்திர பதவியை அடைந்தானோ, அப்படிப்பட்ட யஜ்ஞேச்வரனான பகவான் ஸ்ரீவிஷ்ணுவை ஆராதனை செய்வாயாக" என்று புலஹ மஹரிஷி கூறினார்.

க்ரதுர் உவாச –

யோ யஜ்ஞ புருஷோ யஜ்ஞோ யோகேச: பரம: புமான்|
தஸ்மிம்ஸ்துஷ்டே யரப்ராப்யம் கிம் ததஸ்தி ஜனார்த்தன|| (1–11–48)

"எவன் யஜ்ஞங்களாலே ஆராதிக்கப்படுகின்றவனாகவும், யஜ்ஞ ஸ்வரூபியாகவும், யஜ்ஞங்களுக்கு அதிபதியாகவும் இருக்கின்ற மஹா புருஷனோ, அந்த பகவான்

***ஜனார்த்தனன் திருவுள்ளப் பற்றினானேயானால் அடையத் தகாத ஸ்தானமும் இருக்கின்றதா என்ன?"*** என்று க்ரது மஹரிஷி கூறினார்.

*வஸிஷ்ட உவாச –*

***ப்ராப்னோஷ்யாராதிதே விஷ்ணௌ மனஸா யத்யதிச்சஸி|***
***த்ரைலோக்ய அந்தர் கதம் ஸ்தானம் கிமு வத்ஸ உத்தமோத்தமம்|| (1–11–49)***

***"ஹே குழந்தாய்ஸ்ரீ பகவான் ஸ்ரீ விஷ்ணுவை ஆராதித்தாயாகில் இதுவரையில் இல்லாத புதிய ஸ்தானம் ஒன்றை நீ மனத்தினால் நினைத்தாலும் அதையும் நிச்சயமாக அடைவாய். இவ்விதமிருக்க, முன்னரே படைக்கப்பட்ட மூவுலகங்களுக்கும் மேலான ஸ்தானத்தை அடைவதற்கு ஸந்தேஹம்தான் என்ன?"*** என்று வஸிஷ்ட மாமுநிவர் கூறினார்.

*த்ருவ உவாச –*

***ஆராத்ய: கதிதோ தேவோ பவத்பி: ப்ரணதஸ்ய மே|***
***மயா தத்பரிதோஷாய யஜ்ஜப்தவ்யம் ததுச்யதாம்|| (1–11–50)***

இவ்விதம் ஸப்த ரிஷிகள் கூறியவற்றைக் கேட்ட துருவன், ***"ஹே மஹரிஷிகளே! தாங்களனைவரும் ஆராதிக்கப்பட வேண்டிய அச்சுதனை அடியேனுக்கு நன்றாகத் தெரிந்து கொள்ளும்படி அருளிச் செய்தீர்கள்."***

***யதா ச ஆராதனம் தஸ்ய மயா கார்யம் மஹாத்மன:|***
***ப்ரஸாத ஸுமுகாஸ் தன்மே கதயந்து மஹர்ஷய:|| (1–11–51)***

***"அந்த பகவான் ஸ்ரீ ஜனார்த்தனன் க்ருபையை அடைய அடியேன் ஜபிக்கவேண்டிய மந்திரத்தையும், அந்த பகவான் ஸ்ரீ ஹரியை ஆராதப்பதற்கான வழிமுறைகளையும் அடியேனுக்கு விளக்கியருள வேண்டும்"*** என்று ஸப்த ரிஷிகளை ப்ரார்த்தித்தான்.

*ருஷய ஊசு: –*

***ராஜபுத்ர யதா விஷ்ணோர் ஆராதனபரைர் நரை:|***
***கார்யம் ஆராதனம் தன்னோ யதாவச்ரோதும் அர்ஹஸி|| (1–11–52)***

இவ்விதம் ப்ரார்த்தித்த துருவனுக்கு, ***"ஹே ராஜகுமாரா! பகவான் ஸ்ரீ விஷ்ணுவை நன்கு ஆராதனம் செய்யும் முறைகளை உனக்கு விளக்கிக் கூறுகின்றோம். கேட்பாயாக"*** என்று ரிஷிகள் கூறினர்.

***பாஹ்யார்த்தாதகிலாச்சித்தம் த்யாஜயேத் ப்ரதமம் நர:|***
***தஸ்மின் ஏவ ஜகத்தாம்நி தத: குர்வீத நிச்சலம்|| (1–11–53)***

"பகவான் ஸ்ரீ விஷ்ணுவிடம் பக்தி செய்ய விரும்புகின்ற மனிதன் விஷயாதிகளிலுள்ள அபிலாஷையை முதன்முதலில் நீக்கிக்கொண்டு மனதை நிர்மலமாக்கிக் கொள்ள வேண்டும்."

ஏவம் ஏகாக்ர சித்தேன தன்மயேன த்ருதாத்மனா|
ஜப்தவ்யம் யன்னி போதை தத் தன்ன: பார்த்திவ நன்தன:|| (1-11-54)

"பிறகு அந்த நிர்மலமான மனதை பகவான் ஸ்ரீ முகுந்தனுடைய திருவடித் தாமரைகளிலே நிலைநிறுத்தி, வேறு நினைவேதுமில்லாமல் பகவான் திருவடிகளையே தியானம் செய்து கொண்டிருக்க வேண்டும்."

ஹிரண்ய கர்ப புருஷப்ரதாநாவ்யக்த ரூபிணே|
ஓம் நமோ வாஸுதேவாய ஶுத்த ஜ்ஞாந ஸ்வரூபிணே|| (1-11-55)

"பகவான் திருவடிகளையே தியானம் செய்து கொண்டு மிகத் தூயவனாய், வ்யாபக மந்த்ரத்தில் இரண்டாவதானதும், வ்யஷ்டி ஸமஷ்டி ரூபமாய் ப்ரக்ருதியும் புருஷனும் ஶரீரமுமாகவுள்ள ஶுத்த ஜ்ஞான மயனானவனும், ஸ்வயவ்யதிரிக்த ஸமஸ்த சேதனாசேதனங்களுக்கும் ஶரீரியானவனுமான பகவான் ஸ்ரீ வாஸுதேவனுக்கு நமஸ்காரம் என்பதான அர்த்தமுடைய ஸ்ரீ வாஸுதேவ த்வாதஶாக்ஷர மந்த்ரத்தை ஜபிக்க வேண்டும்."

ஏதஜ் ஜஜாப பகவான் ஜப்யம் ஸ்வாயம்புவோ மநு:|
பிதாமஹாஸ்தவ புரா தஸ்ய துஷ்டோ ஜனார்த்தன:|| (1-11-56)

"ஹே குழந்தாய் துருவனே! உன்னுடைய பிதாமகரான சுவாயம்புவ மநு இந்த த்வாதஶாக்ஷர மந்த்ரத்தினாலே பகவான் ஸ்ரீ ஜனார்த்தனனை ஆராதித்தார்."

ததோ யதாபிலஷிதாம் ஸித்திம் த்ரை-லோக்ய துர்லபாம்|
ததா த்வமபி கோவிந்தம் தோஷயை தத் ஸதா ஜபந்|| (1-11-57)

"அதனால் பகவான் திருவுள்ளம் உகந்து, உன் பிதாமஹரான அந்த சுவாயம்புவ மநுவுக்கு அவர் விரும்பியபடியே மூவுலகங்களிலும் கிடைத்தற்கரியதான ஐஶ்வர்யத்தை ப்ரஸாதித்து அருளினார். நீயும் அவ்விதமே அந்த மிக உயர்ந்த மந்த்ரமான ஸ்ரீ வாஸுதேவ த்வாதஶாக்ஷர மந்த்ரத்தை ஜபித்து அந்த ஸ்ரீயப்பதியை ஆராதித்து உயர்ந்த பலனை அடைவாயாக" என்று ஸப்த ரிஷிகள் சிறுவன் துருவனுக்கு உபதேஶித்தார்கள்.

இதி ஸ்ரீ விஷ்ணு புராணே ப்ரதமே(அ)ம்ஶே ஏகாதஶோ(அ)த்யாய:|

* * * * * * * * * * *